(6 pages) **Reg. No. : ......................................**

**Code No. : 22160** **Sub. Code : JMTA 21/ SMTA 21**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2018.

Second Semester

Tamil — Main

சிற்றிலக்கியம்/சிற்றிலக்கியங்கள்

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. பிரபந்தங்கள் எத்தனை?
   (அ) 100 (ஆ) 96
   (இ) 95 (ஈ) 94

2. காக்கை விடு தூதின் ஆசிரியர் யார்?
   (அ) சோம சுந்தர பாரதி
   (ஆ) வெள்ளை வாரணர்
   (இ) அருணாசலக்கவிராயர்
   (ஈ) கோவை கந்தசாமி முதலியார்

3. புவனம் எத்தனை?
   (அ) 20 (ஆ) 17
   (இ) 14 (ஈ) 8

4. பெண்பாற் பிள்ளைத் தமிழின் இறுதி மூன்று பருவங்களில் ஒன்று ————————
   (அ) சிற்றில் பருவம் (ஆ) சிறுதேர்ப்பருவம்
   (இ) சிறுபறைப்பருவம் (ஈ) அம்மானைபருவம்

5. கலிங்க நாடு எத்தனை பிரிவுகளைக் கொண்டது?
   (அ) 5 (ஆ) 6
   (இ) 7 (ஈ) 8

6. குடகு மலையைப் பிளந்து காவிரி இறங்கி வரும்படி எம்மன்னன் செய்தான்?
   (அ) சித்திரரதன் (ஆ) சேரன்
   (இ) பாண்டியன் (ஈ) பல்லவன்

7. சீவல மங்கை சேர்ந்த நாடு எக்கரையைச் சார்ந்தது?
   (அ) கிழக்கு கரை (ஆ) தென் கரை
   (இ) வடகரை (ஈ) மேற்கு கரை

8. அரவு என்பதன் பொருள் என்ன?
   (அ) பாம்பு (ஆ) உடும்பு
   (இ) ஓநாய் (ஈ) முதலை



*Nesamony Memorial Christian College, Marthandam*

9. முத்தொள்ளாயிரம் ———— யால் சிறப்பு பெறுகிறது

(அ) வடிவம் (ஆ) உத்தி

(இ) கற்பனை (ஈ) உவமை

10. கரி என்பதன் பொருள் என்ன?

(அ) புலி (ஆ) சிங்கம்

(இ) குதிரை (ஈ) யானை

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) 'தமிழே என் இடர் தீர உன்னை வணங்கினேன்' என்ற தலைவி கூறியதை விவரி.

(அல்லது)

(ஆ) தூது செல்வதற்குரிய வழிகளை தமிழ் விடு தூது மூலம் எடுத்துரைக்க.

12. (அ) திருக்கடவூர் ஈசனுக்கு தலைமாலையாக விளங்குபவள் அபிராமி என்பதை விவரி.

(அல்லது)

(ஆ) சிறிய அறிவுள்ள மனத்தே நீ எழுந்தருளியிருப்பது அதிசயம் என்ற அபிராமி பட்டர் கூறியதை விவரிக்க.



13. (அ) போருக்குப் புறப்படும் நான்கு படைகளின் ஒலிகளை ஜெயங்கொண்டார் எவ்வாறு சித்தரிக்கிறார்?

(அல்லது)

(ஆ) விக்கிரம சோழனின் ஆட்சி நிலையை விவரி.

14. (அ) மூத்தப்பள்ளி தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்கிறாள்?

(அல்லது)

(ஆ) குற்றாலத்தின் இயற்கைச் சூழலை குறத்தி எவ்வாறு வர்ணிக்கிறாள்.

15. (அ) சேரன் பகைவர் வணங்கும் கோதையாக திகழ்பவன் என்பதை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'துறை விடுமின் அன்றி உறைமதி அகன்று தொழுமின் அல துய்தல் அரிதே'. நந்திவர்மனை பகைத்துக் கொள்ளாதீர் என்பதை விவரி.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16\. (அ) தலைவி இறைவனிடம் தனக்கு மாலை வாங்கி வா என்று தமிழை எவ்வாறு பணிக்கிறாள்?

(அல்லது)

(ஆ) இறைவனின் கேசாதி பாதப்புனைவு பற்றி தூது இலக்கியம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?

17\. (அ) 'புண்ணியமே தென்னம்மே புவி யேழையும் பூத்தவளே' என்ற வரியின் பொருளினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அபிராமி அம்பிகையின் பாதமலர்கள் என் மனத்தில் எப்போதும் நிலைத்துள்ளன என்பதை ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

18\. (அ) குலோத்துங்களின் நால்வகைப் படைகளும் போருக்கு எவ்வாறு திரண்டன என்பதைப் புலப்படுத்துக?

(அல்லது)

(ஆ) இரண்டாம் இராசேந்திர சோழனின் வீரத்தை விவரி.



19\. (அ) வடகரை வளம் பற்றி பள்ளு கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஈசன் ஆரிய நாடெங்கள், நாடே' என்பதன் சிறப்பை விளக்குக.

20\. (அ) சேரன் உள்ளம் கவர்ந்தகள்வன் என்பதை தோழி தலைவியிடம் எவ்வாறு எடுத்துரைக்கிறாள்.

(அல்லது)

(ஆ) நந்தி வர்மனின் சிறப்புகளை விரிவாக எடுத்துரைக்க.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*